**தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன விளையாட்டுத்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக விளையாட்டுத்துறை அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.7 |
| | | 2. உள்ளகக் கணக்காய்விலான குறைபாடுகள் | 2.8 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | மனிதவள முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.9 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள் | 2.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | வாகன பயன்பாட்டிலான குறைபாடுகள் | 2.3(அ) |
| | | 2. | வெளிவாரி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 2.3(ஆ) |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | | ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை | 2.4 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.5 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்**

விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலின் கீழ் 200 விளையாட்டுத் திடல்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 560 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 33.68 மில்லியன் மேலதிக நிதிஏற்பாடு திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்தது. 22 மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்களினூடாக 332 விளையாட்டுத் திடல்களை அபிவிருத்தி செய்தல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா 367.4 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. குறித்த மாவட்ட செயலாளர்களால் மீளாய்வாண்டின் போது ரூபா 133.5 மில்லியன் செலவிடப்பட்டு 161 விளையாட்டுத் திடல்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. 171 விளையாட்டுத் திடல்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுகததாச தேசிய விளையாட்டு தொகுதியின் ஓடு பாதை**

சுகததாச தேசிய விளையாட்டு தொகுதியின் 400 மீட்டர்கள் மற்றும் 200 மீட்டர்கள் ஒரு பாதையை மீண்டும் இடுவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 250 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் இறுதியளவிலும் ரூபா 56.32 மில்லியன் செலவிடப்பட்டு 20 சதவீதமான அளவுடைய பணிகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

**(இ) இலங்கையர்கள் வெற்றிபெற்ற சர்வதேச வெற்றிகள்**

2016 ஆம் ஆண்டின் போது இலங்கை வீரர்கள் 08 சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி 30 தங்கங்கள், 71 வெள்ளி மற்றும் 107 வெண்கல பதக்கங்கள் எனுமாறு 208 பதக்கங்களை வென்றிருந்தனர். மீளாய்வாண்டின் போது 08 போட்டிகளில் பங்குபற்றி 29 தங்கம், 39 வெள்ளி மற்றும் 11 வெண்கலம் புத்தகங்கள் எனுமாறு 79 பதக்கங்கள் மாத்திரம் பெறப்பட்டிருந்தன.

**2.2 செயற்திட்டங்களை நிறைவேற்றலிலான தாமதங்கள்**

அமைச்சினால் நுவரெலியா விளையாட்டு திடலினை நிர்மாணித்தல் மற்றும் ஆயிரம் பாடசாலைகளின் விளையாட்டினை கட்டியெழுப்புதல் எனும் 02 செயற்திட்டங்களுக்காக முறையே ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 250 மில்லியனான நிதிஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றுள் முதலாவது செயற்திட்டத்தின் பணிகள் 2018 யூன் மாதம் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், அத்திகதியில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் இரண்டாவது செயற்திட்டம் 03 மாத காலதாமதத்தின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வாகனப் பயன்பாடு**

**எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சிற்கு சொந்தமான 2 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சிற்கு சொந்தமான மோட்டார் காரொன்று சுகததாச விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதனை இதுவரையிலும் அமைச்சின் கீழ் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| 2013 | மீண்டுவருபவை | 342.6 | 270.9 | 71.7 | 21 |
| | மூலதனம் | 552.6 | 348.0 | 204.6 | 37 |
| | **மொத்தம்** | **895.2** | **618.9** | **276.3** | **31** |
| 2014 | மீண்டுவருபவை | 403.3 | 380.0 | 23.3 | 6 |
| | மூலதனம் | 806.9 | 498.2 | 308.7 | 38 |
| | **மொத்தம்** | **1210.2** | **878.2** | **332.0** | **27** |
| 2015 | மீண்டுவருபவை | 457.6 | 400.4 | 57.2 | 12 |
| | மூலதனம் | 801.8 | 623.4 | 178.4 | 22 |
| | **மொத்தம்** | **1259.4** | **1023.8** | **235.6** | **18** |
| 2016 | மீண்டுவருபவை | 475.7 | 436.5 | 39.2 | 8 |
| | மூலதனம் | 1160.0 | 779.8 | 380.2 | 33 |
| | **மொத்தம்** | **1635.7** | **1216.3** | **419.4** | **25** |
| 2017 | மீண்டுவருபவை | 460.4 | 409.4 | 51.0 | 11 |
| | மூலதனம் | 3108.8 | 1281.8 | 1827.0 | 58 |
| | **மொத்தம்** | **3569.2** | **1691.2** | **1878.0** | **53** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 3 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 334,620,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது.

(ஆ) 63 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், நிதியேற்பாட்டைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 13601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 12.30 | 12.25 | 5.00 | 5.53 | 30.00 | 21.53 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது.

**நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்படாமை**

கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளபடியான நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி நீங்கலாக ரூபா 251,176 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 01 முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்ட போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**2.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அமைச்சின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிலான ரூபா 142,340 தொகையான மீதியானது ஒதுக்கீட்டுக் கணக்கின்வங்கிக் கணக்குகள் தொடர்பான நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

அமைச்சினால் பின்வரும் பிணைப் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

நிதி கூற்றுக்களுக்குரிய உள்ளக கணக்காய்வ நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பரீட்சிக்கும் பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 119.6 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 691,560 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 32 | 18 | 14 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 15 | 09 | 06 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 109 | 69 | 40 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 83 | 73 | 10 |
| (v) | ஏனைய (அமைய / தற்காலிக / ஒப்பந்தம்) | 04 | 04 | - |
| | மொத்தம் | 243 | 173 | 70 |